KM/ TK/ KANNAKI VIDYALAYAM (KANNAKIPURAM)
கமு/திகோ/கண்ணகி வித்தியாலயம் (கண்ணகிபுரம்)

Grade

THIRD TERM EVALUATION 2025
மூன்றாம் தவணை பரீட்சை

தமிழ் மொழி

Index

நேரம்: 1.30 மணித்தியாலம்

gFjp – I

எல்லா வினாக்களுக்கும் இவ்வினாப்பத்திரத்திலேயே விடை தருக.

1. சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. "அருகு" என்ற சொல் உணர்த்தும் கருத்து யாது?

   1) ஒரு புல் 2) விளிம்பு 3) அறிதல்

2. "உணவு உண்ட பின்னர் சிறிய தூரம் ………….. நல்லது"

   1) உளவுவது 2) உழவுவது 3) உலவுவது

3. "இளமை" என்பதன் ஒத்தகருத்துச் சொல் எது?

   1) முதுமை 2) குழந்தை 3) வாலிபம்

4. "ஒளி" என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல் எது?

   1) வெளிச்சம் 2) இருள் 3) பிரகாசம்

5. நாயகன் என்ற சொல்லின் எதிர்ப்பாற் சொல் எது?

   1) நடிகை 2) நாயகை 3) நாயகி

6. "மேரி வீட்டிற்கு விரைவாக நடந்தாள்" என்ற வாக்கியத்தில் வந்துள்ள பயனிலை அடைமொழிச் சொல் எது?

   1) நடந்தான் 2) விரைவாக 3) வீட்டிற்கு

7. "கிளை" என்ற சொல் எவ்வகைப் பெயரைக் குறிக்கும்?

   1) பொருட்பெயர் 2) காலப்பெயர் 3) சினைப்பெயர்

8. "நீடூழி காலம் ………………" இடைவெளியில் வரவேண்டிய சொல் யாது?

   1) வாழ்க 2) வாள்க 3) வால்க

9. உயர்திணை ஒருமைப் தன்மைப் பெயர்ச்சொல் பின்வருவனவற்றுள் எது?

   1) நாம் 2) நான் 3) நீ

10. தவளையின் இளமைப்பெயராக அமையாதது பின்வருவனவற்றுள் எது?

   1) குஞ்சு 2) குட்டி 3) பேத்தை

(10 x 2 = 20 Gs;spfs;)

1. இடைவெளி நிரப்புக.

1. அடம்பன் ………………………….. திரண்டால் மிடுக்கு
2. அடிமேல் ………………………….. அடித்தால் அம்மியும் நகரும்
3. ஒரு பானை ………………………… ஒரு சோறு பதம்
4. சூடு கண்ட ………………………… அடுப்பங்கரையை நாடாது
5. குற்றமுள்ள ………………………… குறுகுறுக்கும்

(5 x 2 = 10 Gs;spfs;)

6. பின்வரும் ஒருமை வாக்கியங்களுக்கு பன்மை வாக்கியமாக மற்றி எழுதுக.

1. புறா பறந்து சென்றது ……………………………………………………………..
2. நட்சத்திரம் வானில் மின்னியது ……………………………………………………..
3. தாமரைப்பூ மலர்ந்தது ……………………………………………………………
4. குதிரை வேகமாக ஒடியது ……………………………………………………..

(4 x 1 = 4 Gs;spfs;)

5. பின்வரும் சொற்களை சேர்த்தெழுதுக.

1. வாழை + பழம் = ………………………………
2. பால் + குடம் = ……………………………………
3. பூ + சோலை = ……………………………………
4. மா + இலை = ……………………………………
5. பால் + சோறு = ……………………………………
6. பொன் + காசு = ……………………………………
7. மண் + குடம் = ……………………………………
8. மரம் + வேர் = ……………………………………
9. பனை + வேர் = ……………………………………

10. மா + காய் = ...

(10 x 1 = 10 Gs;spfs;)

11.அடைப்பிற்குள் தரப்பட்ட சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

கணீர் கணீர்   மட மட   குடு குடு   குல கல   கம கம   சல சல

1. பாட்டி .... என்று நடந்தார்
2. ஆலய மணி .... என்று ஒலித்தது.
3. எனது தங்கை .... என்று சிரித்தாள்.
4. அவன் இளநீரை .... என்று குடித்தான்.
5. ஆற்று நீர் .... வென்று ஓடியது.

(5 x 2 = 10 Gs;spfs;)

6. பின்வருபவற்றில் இளமைப பெயர் எழுதுக.

1. தவளை ....
2. பயிர் ....
3. புலி ....
4. வேம்பு ....
5. தென்னை ....
6. பலா ....
7. யானை ....
8. எருமை ....

(8 x 1 = 8 Gs;spfs;)

9. ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக

1. அழகு ....
2. உடல் ....

3. களிப்பு ………………………..

4. சுத்தம் ………………………..

(4 x 1 = 4 Gs;spfs;)

5. எதிர்கருத்துச் சொற்களை எழுதுக.

1. அண்மை ……………………..

2. இலாபம் ……………………….

3. உறவு …………………………

4. சாதகம் ……………………….

(4 x 1 = 4 Gs;spfs;)

5. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.

அன்று தொலைநோக்குப் பார்வையுடன் அசோகச் சக்கரவர்த்தி வீதியோரங்களில் மரக்கன்றுகளை நட்டார். அதனால் நன்றாக மழை பொழிந்தது, விவசாயம் செழித்தது, மக்கள் வளமுடன் வாழ்ந்தனர்.

1. வீதியோரங்களில் மரக்கன்றுகளை நட்டவர் யார்?

………………………………………………………………………………..

2. நீண்ட நாட்திட்டம் என்ற கருத்தைத் தரும் சொற்றொடர் எது?

……………………………………………………………………………….

3. மரம் + கன்று என்பதைச் சேர்த்தெழுதுக?

……………………………………………………………………………….

4. பந்தியில் உள்ள உயிர் எழுத்து எது?

……………………………………………………………………………….

5. பந்தியில் உள்ள உயிர்மெய் எழுத்து 3 எழுதுக?

……………………………………………………………………………….

(5 x 2 = 10 Gs;spfs;)

6. பின்வரும் சொற்களில் எதிர்பாற் சொற்கள் அல்லாத சொல்லின் கீழ் கோடிடுக.

1. அரசன், மந்திரி, அரசி, தம்பி, தங்கை

2. தேவன், தம்பி, தங்கை, நடிகன், நடிகை

3. உத்தமன், உத்தமி, தமையன், மகள், மகன்

4. சிறுவன், புதல்வன், புதல்வி, புத்திரன், புத்திரி

5. மேலோன், நல்லவன், நல்லவள், பாட்டன், பாட்டி

(5 x 2 = 10 Gs;spfs;)

6. காட்சிப்படத்தைப்பார்த்து நிகழ்காலத்தில் வாக்கியம் எழுதுக.

1. ………………………………………………………………………………………………..

2. ………………………………………………………………………………………………..

3. ………………………………………………………………………………………………..

4. ………………………………………………………………………………………………..

5. ………………………………………………………………………………………………..

(5 x 2 = 10 Gs;spfs;)